# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/64 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1877/64 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**திப்பட்டுகொட ஸ்ரீ சுபத்ராராம விஹாரை புனித பிரதேசத்தினை புனித பூமியாகப் பிரகடனப்படுத்தல்**

*இலக்கம் 1681 கொண்ட 2010, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1681/3 ஆம் இலக்கம் கொண்ட 2010, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சர் கலாநிதி திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள புனித பூமி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தித் துறை விடயம் தொடர்பாக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் நீண்டகால பாதுகாப்புக் கருதி அந்தப் பிரதேசத்தினை புனித பிரதேசமாகவும் அதனை “திப்பட்டுகொட ஸ்ரீ சுபத்ராராம விஹாரைபுனித பூமி” என அறிமுகப்படுத்திக்கொள்ள முடியுமெனவும் பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*கலாநிதி தி. மு. ஜயரத்ன,*
*பிரதமர், பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சர்.*

*பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சு,*
*இலக்கம் 135,அநகாரிக்க தர்மபால மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2014, ஓகத்து 20.*

**அட்டவணை**

*திப்பட்டுகொட ஸ்ரீ சுபத்ராராம விஹாரை புனித பூமி உள்ளடக்கும் பிரதேசம்*

*நில அளவையாளர் நாயகத்தின் 2012, பெப்புருவரி மாதம் 9 ஆம் திகதிய இலக்கம் NU/WLP/2012/028 கொண்ட திட்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் A மற்றும் B இனால் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய மாகாணத்தில், நுவரெலியா நிருவாக மாவட்டத்தில், வலப்பனை பிரதேச செயலகப் பிரிவில், ஒயபலாத்த கோரளையில், சிறு பிரிவில், திப்பட்டுகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 0.4587 ஹெக்டேயார்ஸ் பரப்பளவு கொண்ட கீழ் குறிப்பிடப்படும் எல்லைகளைக் கொண்ட முழுப் பிரதேசம்.*

**துண்டு இலக்கம் A**

வடக்கு: பாதைமற்றும் H. கமுபண்டா, R.M.P. புஞ்சிபண்டா, கருணாரத்ன வாசலகே ஆகியோர் உரிமைகோரும் போரகேவத்த;
கிழக்கு : H. கமுபண்டா, R.M.P. புஞ்சிபண்டா, கருணாரத்ன வாசலகே ஆகியோர் உரிமைகோரும் போரகேவத்த மற்றும் பாதை;
தெற்கு : பிரதேச சபை வீதி;
மேற்கு : பிரதேச சபை வீதி மற்றும் பாதை.

**துண்டு இலக்கம் B**

வடக்கு : H.M. தயாரத்ன உரிமைகோரும் தெனியகொல்ல மற்றும் பிரதேச சபை வீதி;
கிழக்கு: பிரதேச சபை வீதி மற்றும் கால்வாய்;



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தெற்கு : பாதை மற்றும் பிரதேச சபை வீதி மற்றும் H.M. தயாரத்ன உரிமைகோரும் குணேகொல்ல வயல்;
மேற்கு : கால்வாய் மற்றும் H.M. தயாரத்ன உரிமைகோரும் குணேகொல்ல வயல்.

*09-487*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.